**செ. கு. எண்: 081** **நாள்: 10.08.2019**

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 10.8.2019</u>

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து அமராவதி பிரதானக் கால்வாய்க்குட்பட்ட புதிய ஆயக்கட்டு பகுதிகளில், நிலையில் உள்ள பயிர்களை காப்பாற்றும் பொருட்டு, தண்ணீர் திறந்துவிடக் கோரி அமராவதி பிரதானக் கால்வாய் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

அமராவதி பிரதானக் கால்வாய் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, அமராவதி பிரதானக் கால்வாய்க்குட்பட்ட புதிய ஆயக்கட்டு பகுதிகளில், நிலையில் உள்ள பயிர்களை காப்பாற்றும் பொருட்டு, அமராவதி பிரதானக் கால்வாய் மதகு வழியாக 11.08.2019 முதல் 25.08.2019 வரை 15 நாட்களுக்கு 570 மி.க.அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 25,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**